### பொன்வாக்கு

இந்த உலகத்தில் கட வுள் ஒருவரைத் தவிர நிலைப்பது என்று சொல் லத்தக்கது எதுவுமே இல்லை. நாம் செய்யும் காரியங்களெல்லாம் ஆன்ம திருப்திக்காகவே செய்கி றோம்.

— விவேகானந்தர்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆடி ௴ 15 உ (30-7-65)


## தீராத பிரச்னை தீரவழி

இலங்கையில் வீடில்லாப் பிரச்னை தீராத பிரச்னையாக இருக்கிறது. இப்பிரச்னைக்கு அரசாங்கம் மட்டும் தீர்வு காண வேண்டுமென எதிர் பார்க்க வேண்டியதில்லை.

வீடில்லாப் பிரச்னை பொது வாக எல்லோரையுமே பாதிக் கின்றபோதிலும் குறிப்பாக நடுத்தர வகுப்பினரே பெரும் அல்லல்படுகின்றனர். வீடில் லாப்பிரச்னையைக் குறைக்கும் நோக்கத்துடன் வங்கிகள் மூலம் கடன் வழங்கும் திட்டத் தையும் அரசாங்கம் அமுலுக் குக் கொண்டு வந்தது. ஆனா லும் பெரும் முதலாளிகளும் செல்வந்தர்களும் அதைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு வீட்டமைப்புக்குக் கடன் எடுத்து மாடிவீடுகளை யும் பங்களாக்களையும்தான் கட்டினர். நடுத்தர வகுப்பின ரும் ஏழையெளிய மக்களும் உரிய பயன் பெறவில்லை. இருப்பதற்குக் குடிசைகூடக் கிடைக்காமல் ஏழையெளிய மக் கள் அவதியுறும் பொழுது மாடிவீடுகளையும் மாளிகை களையும் கட்டிவைத்து பாழ டையவிடும் காட்சிகளையும் இங்கு காண முடிகிறது.

குடியிருக்க வீடு கிடைப்ப தாக இருந்தாலும் வாடகை உச்சத்திலிருக்கும். வாடகை முன்பணம் அல்லது 'சந்தோ ஷம்' கொடுக்க வேண்டும். இத்தனையும் கொடுத்தாலும் 'சந்தோஷ'ப் பணத்துக்கோ முன்பணத்துக்கோ 'கணக்கு' இருக்காது. வாடகைப் பணத் தைப் பெற்றுக் கொண்டு அதில் மூன்றில் ஒரு பகுதிக் குத்தான் சீது கொடுப்பார். வாழ்க்கைச் செலவு அதிகரித் துள்ள இக்காலத்தில் வருமா னத்தில் ஒரு பெரும்பகுதியை 'குடியிருக்க'க் கூலியாகக் கொடுத்துவிட்டு அரைப்பட் டினி கிடக்கும் குடும்பங்கள் பல! அதிக வாடகை கொடுத் தாலும் நிம்மதியாக, நிரந்தர மாக, வசதியுடன் வாழ்க்கை நடத்தவும் முடிவதில்லை. ஒரு வீட்டில் பல குடும்பங்கள் வாழ்வதால் சுகாதாரக்குறைவு காரணமாக நோய்க்குள்ளாகி அல்லல்படும் குடும்பங்கள் அனந்தம்.

வீடில்லாப் பிரச்னையைக் குறைத்து பகலெல்லாம் உழை த்துக் களைத்து மாலையில் வீடு திரும்பும் மக்கள் நிம்மதியாக இரவைக் கழிக்க வாழ்க்கை யில் வசதிபடைத்தவர்கள் மனம்வைத்தால் வழிவகுக் கலாம். மாளிகைகளையும் மாடி வீடுகளையும் கட்டும் செல்வந் தர்கள் நடுத்தரவகுப்பினரும் எளிய தொழிலாளர்களும் தங் கள் உழைப்புக்கேற்ற முறை யில் குறைந்த வாடகையில் வசிக்கக்கூடிய சிறியவீடுகளைக் கட்டி நிதானமான வாடகைக் குக் கொடுக்கலாம்; பெருந் தொகையான பணத்தை இலா பமாகப் பெற்று வருமானவரி செலுத்தும் வர்த்தக ஸ்தாபன ங்களும் சிறிய வசதியுள்ள வீடு களைக்கட்டி வாடகைக்கு விடு வதன்மூலம் வீடில்லாப்பிரச்னை க்கு ஓரளவு தீர்வுகாண முன் வரலாம். மாநகரசபை, நகரசபை ஆகியவைகளும் நடு த்தரவகுப்பினருக்கும் தொழி லாள வகுப்பினருக்குமான சிறு வீடமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்தலாம்.

அரசாங்கமும் வீடில்லாப் பிரச்னையை நீக்குவதற்கு குறு கியகால அவசரத்திட்டமொன் றையும் நீண்டகாலத்திட்ட மொன்றையும் உருவாக்க வேண்டும். வர்த்தக ஸ்தா பனங்களினதும் ஸ்தலஸ்தா பனசபைகளினதும் ஆதரவுட னும் ஒத்துழைப்புடனும் குறு கியகால வீடமைப்புத்திட்டங் களை அமுல்நடத்தி உடனடிப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண லாம். வீடில்லாத மக்களுக்கு வீடு கிடைக்கவேண்டும்; அது வும் குறைந்த வாடகையில் கிடைக்கவேண்டும். வீடமைப்பு மந்திரி இவ்விஷயத்தில் கவ னம் செலுத்துவது அவசிய முக்கியமாகும்.

# பழம் பெருமை வாய்ந்த வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம்

## இன்று தேர் உற்சவம்



வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம், இலங்கையில் உள்ள சிவாலயங்கள் ஒல்லாந் தர்களால் தகர்க்கப்பட்ட காலத்தில் 1787-ம் வருடம் நிர்மாணிக்கப்பட்டு, 179[illegible] ஈ தாண வருடம் சித்திரை மாதம் புனர்பூச நக்ஷத்திர சுபதினத்தன்று ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானையும் ஸ்ரீ வாலாம்பிகையம்மையையும் வைத்திலிங்கச்செட்டியார் என்னும் ஒரு பிரபல வர்த்தகர் நிர்மாணித்து வைத்தார். ஒல்லாந்த மகாதேசாதிபதியின் நண்பனுமிருந்த வைத்திலிங்கச் செட்டியார் அரசாங்கத்திடம் முத்துச்குளிப்புக் குத்தகையை ஏற்று பெருந்தொகைப் பணத்திற்கு அதிபதியானார். அப் பணத்தின் ஒரு பகுதியை தேவஸ்தானங்கள் நிர்மாணிப்பதிலும் தர்மகைங்கர்யங்களிலும் செலவிட்டு இறைபணி புரிந்துவந்தார். வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தை மூலாதாரமாகக்கொண்டு பெரிய கடை கே கே எஸ் வீதியில் வேம்படி விநாயர் ஆலயத்தையும், வண்ணை முற்றவெளியில் முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தையும் வண்ணை வட மேற்கில் இலுப்பையடிக் கோவிலையும் காசி கோவிலையும் நிர்மாணித்துநித்ய நைமித்யங்கள் ஒவ்வோர் தேவஸ்தானத்திலும் நிறைவேற நிலபுலன்களை வாங்கி வைத்தார். பின்னர் தமது புத்திரர்களாகிய கோபாலச் செட்டியாரிடத்தும் கந்தப்பச் செட்டியாரிடத்தும் தேவஸ்தானங்களின் நிர்வாகங்களை ஒப்புவித்துக் காசிஸ்தலம் சென்று தமது அந்தியகாலத்தைக் கழித்து இறையடி சேர்ந்தார். அன்னாரின் வழித்தோன்றலில் ஒருவரே தற்போதைய தேவஸ்தான காவலராகிய ஸ்ரீ வை. கந்தப்பச்செட்டியாரவர். விசப்பெண்ணவெனின் ஒல்லாந்தார் ஏனைய தேவஸ்தானங்களைத் தகர்த்தெறிந்த அதே காலத்திற்றான் இத்தேவஸ்தானம் நிர்மாணிக்கப்பட்டது.

இம்மகிமை பொருந்திய தேவஸ்தானத்திற்கு வேண்டிய வருவாய் நிலபுலன்களால் அனுதினமும் கிடைத்து வந்து பின்னர் வாழ்க்கைச் செலவு அதிகரித்த நேரத்திலும் அனுதின வருமானமே கிடைத்து வருகின்றமையால் நிர்வாகத்தை அதி உன்னத ஸ்தானத்தில் நிர்வகிக்கப் போதிய வருவாய் இல்லாமற் போயிற்று இதனால் அனுதினமும் நிர்மாணிக்கப்பட்ட ரதங்களையும் ஏனைய வாகனங்களையும் புதிதாக உருவாக்க முடியாமற் போகவே புதிய பஞ்சரதங்கள் உருவாக்க ஓர் திருப்பணிச்சபையை நியமித்து அச்சபை தமது கடமையைச் செய்து வருகின்றது. இந்தியாவைச் சேர்ந்த பிரபல சிற்பாசாரியார் ஸ்ரீ இ கோவிந்தராஜன் பஞ்சரத நிர்மாண வேலையை மேற்கொண்டு இவ்விடம் இக் கிய வினின்றும் வருவதற்காக வேண்டிய ஆயத்தங்கள் யாவும் நடைபெற்று வருகின்றன.

இலங்கையில் நித்ய நைமித்யங்களில் மேம்பட்ட தேவஸ்தானங்களில் இதுவுமொன்றாகும் இத்தேவஸ்தானத்திலேயே நாவலர் பிரான் தமது முதற்பிரசங்கத்தை ஆரம்பித்தாரென்னில் மிகையாது. இத் தேவஸ்தானம் தமது ஆதனங்களில் அமோகமானவற்றை அநேக பாடசாலைகளுக்கும் அரசாங்கக் காரியாலயங்கட்கும் நன்கொடை செய்துள்ளது.

தினமும் ஆறுகாலப் பூஜை கிரமமாக நிறைவேறும் இங்கு வெள்ளிக்கிழமை தோறும் சகஸ்ரநாம அர்ச்சனை [illegible] தேவஸ்தான [illegible] நிறைவேற்றப்படுகின்றன. ஒவ்வோர் வருடமும் சிவன் உற்சவமும், சேவல் உற்சவமும் [illegible] வேதியர்களும் [illegible] முடிய. அன்னையின் ஆடிப்பூர உற்சவமும் [illegible] மாகும். வருடந்தோறும் இரு மகோற்சவங்கள் நிறைவேறும் இத்தேவஸ்தான தேவிரதோற்சவம் ஆரம்பித்தபடி நிறை வேறும் ஸ்ரீ வாலாம்பிகாதேவி ரதத்தில் ஆரோகணித்துச் சுமார் 10-30 மணியளவில் வீதி வலம்வரும் காட்சி வெகு அற்புதம்.

# "வியட்நாம் சென்று போராடத் தயார்"

## யாழ் கம்யூனிஸ்ட் கூறுகிறார்

உடுப்பிட்டி, வியமுன் வியட்நாம் மீதான அமெரிக்க ராணுவ படையினரின் எதிர்ப்பு நடுவலும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. சிறியமீனைப் பெரிய மீன் விழுங்குவது போன்ற இச்செயல் நியாயமற்றது. இலங்கை அரசாங்கம் சம்மதித்தால் நமது வாலிபர் சங்க அங்கத்தவர்கள் வியட்நாமுக்குச் சென்று அங்குள்ள கொரில்லாப் படையினருடன் சேர்ந்து அமெரிக்க துருப்புகளை எதிர்க்கத் தயாராகவிருக்கிறோம். அட்டூழிய செய்கைகள் புரிந்து வரும் அமெரிக்காவிற்கு எதிர்ப்பையும் வியட்நாம் மக்களுக்கு நமது பரிபூரணமான ஆதரவையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

இவ்வாறு கெருடாவில் [illegible] கோவிலடி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற கெருடாவில் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. என். தருமராசா பேசுகையில் கூறினார்.

"பரிணாம வளர்ச்சி" என்பது பற்றி யாழ் பிரதேச கம்யூனிஸ்ட் தலைவர் திரு. வி. ஏ. கந்தசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது-

"முதலாளித்துவமும் விஞ்ஞானமும் வளர்ச்சியடைந்த கட்டத்தில் தான் கார்ல் மார்க்ஸும் தோன்றிப் பொதுவுடைமைக் கருத்துக்களை வெளியிட்டார். இவருக்கு முன்னர் இன்று போன்று அரசியல்-சாதிப் பிரிவுகள் அன்று இருக்கவில்லை. தனது கரங்களை உபயோகித்துச் செயல்பட்டதுதான் மனிதனது முதலாவது முக்கிய மாற்றம். ஒருவரை ஒருவர் அடிமைப்படுத்தும் பணத்காரக் கருவியாகவே அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது, பிரபுத்துவசமுதாயத்தை பொட்டியே மதங்கள் தோன்றின என்னும் [illegible] நீதியான உற்பத்திச் சாதனங்களை முதலாளித்துவ சமுதாயத்திலும் காணலாம். புத்தகத்திற்கு எதிராக மக்கள் போராடிப் புரட்சிகர சோஷலிச சமுதாய அமைப்பைத் தோற்றுவிக்க வேண்டும்."

## இசையாளர் வருகை

ஆடிவேல் போன்ற சிறந்த விசேஷ சந்தர்ப்பங்களில் இந்தியாவிலிருந்து இங்கு வருவிக்கப்படும் இசைக் கலைஞர்களின் இசைவிருந்தை சங்கீத ரசிகர்களும், இசைவல்லுனர்களும் கேட்டு ரசிப்பதை யாழ்ப்பாணம் இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கம் அன்றும், இன்றும், என்றும் தடைசெய்ய நினைத்ததுமில்லை நினைக்கப்போவதுமில்லை.

இப்படியான சந்தர்ப்பங்களுக்கு இந்தியாவிலிருந்து இசைக்கலைஞர்கள் வருவதை மனப்பூர்வமாக சங்கம் வரவேற்கின்றது. அரசாங்கத்திற்கு நாங்கள் அனுப்பிய மகஜர் ஒவ்வொன்றிலும் இக்கொள்கையை நிலைநாட்டியுள்ளோம். கலைத்திறனைக் கருத்திற்கொள்ளாது பொருள் வருவாயை மாத்திரமே கருத்தாகக்கொண்டு இங்கு அழைக்கப்பட்டு இங்குள்ள இச்சமுகத்தினரின் பொருளாதாரம் பாதிக்கத் தக்கவகையில் இந்திய இசைக்கலைஞர்கள் வருவதையே நாங்கள் வன்மையாக எதிர்த்து வந்துள்ளோம் இந்நிலை நீடிப்பின் இச்சமூகத்தினருக்குதொழில்,பொருளாதாரம் அபிவிருத்தி அற்றுப்போவது மல்லாமல், இச்சமூகத்தில் இத்தொழிலை பயிலுபவர்களும் அற்றுப்போய்விடுவார்கள் என்பதே எமது கவலை.

கலைஞர்கள் நிலையாக இங்கு வந்து தங்குவதை அனுமதிப்பதில் இலாபமடைகிறவர்கள் அக்கலைஞர்களேயன்றி இச்சமூகத்தவர்கள் அல்ல. இதனால் எமது நாட்டிற்கு பொருளாதார வீழ்ச்சி ஏற்படுவதுடன் அக்கலைஞர்களுக்குச் செல்லுமதியாகும் பணத்தை அவர்கள் பெறச்செய்வதில் அரசாங்கம்ஏமாற்றப்படுகிறது

இச்சமுகத்தவரின்கலை அபிவிருத்தியில் நாட்டமுள்ள அறிவாளிகள் இந்தியக் கலைஞர்கள் வருகையில் [மாத்திரம் கலை விருத்தியடையும் என்று கருதாது இக்கலையைப் பயிலுவதற்கு உகந்த ஓர் பாடசாலையை அமைப்பதில் அனைவரும் சிரத்தைகொண்டுழைத்துழைத்தால் அது பெரு பயன் தரக்கூடியதாகும்.

இ. செந்திவேல்
காரியதரிசி

## கட்டுநாயக்க விமானநிலையம் மீண்டும் திறக்கப்படும்

டம்லடபிட்டி, வியமுன் கட்டுநாயக்க விமானநிலையம் சர்வதேச விமானபோக்குவரத்துச் சேவைக்காக அடுத்த மாதம் 10-ந் திகதியிலிருந்து திறந்துவிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடா அரசாங்கத்தினரின் உதவியுடன் இந்த விமானநிலையம் சீர்திருத்தப்பட்டுள்ளது.

## இசைவிழா நடத்தமுடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி சமீபத்தில் நடைபெற்ற அளவை இசைக்கலைமன்ற நிர்வாகசபைக்கூட்டத்தில், சென்றவருடத்தைப்போலச் சிறப்பான முறையில் இவ்வருடமும் இசைவிழா நடாத்த வேண்டுமென்றும் இவ்விழா அடுத்தமாதம் 27, 28, 29-ந் திகதிகளில் கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் நடைபெறவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அந்த இசைவிழாவுக்கான ஏற்பாடுகள்யாவும் செய்யப்பட்டுவருகின்றன.

# உடனடியாக 50,000 அமெரிக்க துருப்புக்கள் வியட்னமில் இறங்கும்

## "அமெரிக்காவை தோற்கடிக்க முடியாது என்பதை கம்யூனிஸ்டுகளுக்கு காட்டுவோம்"

### ஜனாதிபதி ஜோன்ஸனின் அறிக்கை

வாஷிங்டன், ஜூலை 29

**அமெரிக்கா, தென்வியட்னாமுக்கு உடனடியாக மேலும் 50,000 துருப்புகளை அனுப்புமென்றும், படைக்கு ஆள்திரட்டும் தற்போதைய விகிதம் இரட்டிக்கப்படும் என்றும் ஜனாதிபதி ஜோன்ஸன் நேற்று டெலிவிஷன் நிருபர்கள் மகாநாட்டில் பேசியபோது அறிவித்தார்.**

புதிதாக அனுப்பப்படவிருக்கும் துருப்புகளையும் சேர்த்து தென்வியட்னாமில் 125000 துருப்புகள் அனுப்பப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வியட்னாம் சம்பந்தமாக ஜனாதிபதி ஜோன்ஸன் நேற்று முக்கிய அறிக்கை ஒன்று விடுத்தார்.

தென்வியட்னாமில் தனது படைபலத்தை அதிகரிக்கும் அதேசமயம் அங்கு நிபந்தனையற்ற சமாதானத்துக்கு அமெரிக்கா தயாராய் இருப்பதாயும், எவருடனும் எந்த இடத்திலும் எச்சமயத்திலும் வியட்னாமில் அமைதியை ஏற்படுத்த பேச்சு நடத்துவதற்கு தயாராய் இருப்பதாயும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐ. நாவும், உறுப்பு நாடுகளும் வியட்னாமில் சமாதானத்தை ஏற்படுத்த தங்கள் முயற்சியையும், செல்வாக்கையும் உபயோகிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார். தாம் ஊதாண்டுக்கு இதுபற்றிக் கடிதம் எழுதியிருப்பதாயும் திரு ஜோன்ஸன் தொடர்ந்து கூறினார்.

"வியட்னாமில் அமெரிக்காவை சண்டைமூலம் தோற்கடிக்க முடியாது என்பதை கம்யூனிஸ்டுகளுக்குக் காட்டுவோம். ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுடன் மோதுவதன் மூலம் சண்டையை விஸ்தரிக்க நாம் விரும்பவில்லை. அதற்கான முயற்சி எதையும் செய்யவும் மாட்டோம்" என்றார் அமெரிக்க ஜனாதிபதி.

நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்வதோ, ரிசர்வ் படைகளைச் சேவைக்கழைப்பதோ இப்போது அவசியமில்லை என்றும் அவசியம் எனக்கருதப்பட்டால் அப்படிச் செய்யப்படும் என்றும் திரு ஜோன்ஸன் கூறினார்.

**மாஸ்கோ எதிரொலி**

திரு ஜோன்ஸனின் அறிக்கை பற்றி மாஸ்கோ ரேடியோ குறிப்பிடுகையில் வியட்னாமில் யுத்தத்தை அதிகரிக்க திரு. ஜோன்ஸன் புதிய முயற்சியை மேற்கொண்டிருக்கிறார் என்றும் பெரிய அபாயத்தை அவர் எதிர்நோக்குகிறார் என்றும் தெரிவித்தது.

## டாக்டர் ஹோசிமின்னுக்கு கானா அதிபரின் கடிதம்

### தூது கோஷ்டி சமர்ப்பித்தது

ஹனோய், ஜூலை 29

வடவியட்னாம் சென்றிருந்த கானா தூதுகோஷ்டி, அந்நாட்டு அதிபர் டாக்டர் ஹோசிமினைச் சந்தித்தும் பேச்சு நடத்தியது. கானா அதிபர் நிக்ருமாவின் கடிதமொன்றைத் தூதுகோஷ்டித் தலைவர் திரு அமர், ஹோசிமினிடம் சமர்ப்பித்தார். அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்ற விபரம் வெளியிடப்படவில்லை.

இதற்கிடையில் நேற்று வடவியட்னாமில் சுட்டுவீழ்த்தப்பட்ட தங்கள் விமானத்திலிருந்து குதித்த விமானியைக் காப்பாற்றும்பொருட்டு, அமெரிக்க ஹெலிகொப்டர் விமானங்கள் சேற்றில் இறங்கின.

விமானியை ஹெலிகோப்டரில் ஏற்றும்வரை, அவரை நெருங்காமலிருக்கும் பொருட்டு முன்னேறிவந்த வடவியட்னாம் துருப்புகள்மீது ராக்கெட்டுகளையும், பீரங்கிகளையும் அந்த விமானங்கள் வீசின.

ஹானோயிலிருந்து 50 கிலோமீட்டர் தூரத்தில் ராணுவப் பாசறைகளையும் நேற்று அமெரிக்க விமானங்கள் தாக்கின. சமீபத்தில் தாக்கப்பட்ட ஏவுகணைப் பிராந்தியத்திலேயே இந்தப் பாசறைகள் இருக்கின்றனவெனக் கூறப்பட்டது.

தென்வியட்னாமில் கேந்திர நெடுஞ்சாலை ஒன்றை கொரில்லாக்கள் நேற்று துண்டித்து விட்டார்கள். மற்றொரு கொரில்லா தாக்குதலில் அரசாங்கத் துருப்புகளுக்கு பலத்த சேதம் விளைவிக்கப்பட்டது.

—

## பொலிஸார் மகாநாடு

புதுடில்லி, ஜூலை 29

கட்ச் சம்பந்தமாக பாகிஸ்தான் பொலிஸ் அதிகாரிகளின் மகாநாடு இன்று ஆரம்பமாகியது.

## தாராசிங்-ராஜாஜி பேச்சு

சென்னை, ஜூலை 29

அகாலி தலைவர் மாஸ்டர் தாராசிங்கும், சுதந்திரா கட்சித் தலைவர் ராஜாஜியும் நேற்று சென்னையில் சந்தித்துப் பேசினர். "பஞ்சாபி சுபா" அமைக்கும் விஷயம் குறித்து இரு தலைவர்களும் 90 நிமிஷம் சம்பாஷித்தனர். பஞ்சாபி சுபா பற்றிய தமது வேலைத்திட்டத்தை அடுத்த மாதம் டில்லியில் வெளியிடப்போவதாய் மாஸ்டர் தாராசிங், நிருபர்களிடம் தெரிவித்தார்.

—

## கம்யூனிஸ்ட் எதிர்ப்பு முன்னணி

பாங்காக், ஜூலை 29

மலேசியாவும் தாய்லந்தும் கூட்டு கம்யூனிஸ்ட் எதிர்ப்பு முன்னணி ஒன்றை ஆரம்பிக்கவிருக்கின்றன. இதற்கான தலைமைக் காரியாலயம் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

—

## பிரிட்டிஷாருக்கு வெளியேற்ற உத்தரவு

மாஸ்கோ, ஜூலை 29

மாஸ்கோவிலுள்ள திரு. பிஷப் என்ற பிரிட்டிஷ் ராஜதந்திரி ஒருவரை உடன் வெளியேறுமாறு ரஷ்யா உத்தரவிட்டிருக்கிறது. இவர் உளவறியும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாய்க் குற்றம்சாட்டப்பட்டது. ஆனால் இங்குள்ள பிரிட்டிஷ் தூதராலயம் இக்குற்றச்சாட்டை மறுத்தது.

## கவலை!

வாஷிங்டன், ஜூலை 29

வியட்னாமில், அமெரிக்கா நாளுக்குநாள் தீவிர ஈடுபாடு கொள்ள ஆரம்பித்திருப்பதும் வடவியட்னாமில் ரஷ்ய ஏவுகணைத் தளங்களைத் தாக்கியிருப்பதும் குறித்து அமெரிக்க பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் பலர் கவலைகொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதேசமயம் வியட்னாமின் பலமான பகுதிகளில் போரிடும், தென்வியட்னாம் துருப்புகளுக்குப் பதில் இனி அமெரிக்கத் துருப்புகளே போரிடுவரென்றும் தெரிகிறது.

## வியட்னாமுக்கு விமான டிவிஷன்

வாஷிங்டன், ஜூலை 29

வியட்னாமுக்கு விமான டிவிஷன் ஒன்று அனுப்பப்படவிருப்பதாக ஜனாதிபதி ஜோன்ஸன் நேற்று அறிவித்தார். வியட்னாமில் அமைதியை ஏற்படுத்த இந்தியா மேற்கொண்டு வரும் முயற்சியையும் பிரிட்டிஷ் மந்திரி திரு டேவிஸ், காமன்வெல்த் தூதுகோஷ்டி ஆகியோரின் ஹனோய் விஜயத்தையும் அவர் பாராட்டினார்.

நேற்று சுண்டுவீசி அழிக்கப்பட்ட ஏவுகணைத் தளத்தில் ரஷ்யர்கள் இருந்தார்களா அல்லது, வடவியட்னாமியர் இருந்தார்களா என்பது தமக்குத் தெரியாது என்றும் ஜனாதிபதி கூறினார்.

—

## கன்சர்வேட்டிவ் கண்டன தீர்மானம்

லண்டன், ஜூலை 29

வருகிற திங்கட்கிழமை காமன்ஸ் சபையில் அரசாங்கத்தின் மீது கண்டனத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரப்போவதாக. புதிய கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் திரு ஹீத் நிருபர்களிடம் கூறினர். அரசாங்கத்தின் பொருளாதார கையாலாகாத்தனத்தைக் கண்டிக்குமுகமாகவே இதைக்கொண்டு வரவிருப்பதாய் அவர் தெரிவித்தார். கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவரானபின் அவர் அளித்த முதலாவது நிருபர் பேட்டி இது.

—

## கிரீஸில் பொது வேலை நிறுத்தம்

ஏதென்ஸ், ஜூலை 29

ராஜினாமா செய்த கிரேக்க பிரதமர் திரு: பபாந்திரியோவை ஆதரித்து கிரீஸில் நேற்று பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து பார்லிமெண்டை மன்னர்கூட்டியிருக்கிறார், புதிய பிரதமருக்கு நம்பிக்கை தெரிவிக்கவே பார்லிமெண்ட் கூட்டப்படவிருக்கிறது.

—

## கல்கத்தா நிலைமை

கல்கத்தா ஜூலை 29

நேற்று கல்கத்தாவில் எல்லா டிராம்களும் போக்குவரத்திலிருந்து நிறுத்திவைக்கப்பட்டன. பெரும் ஆர்ப்பாட்டம் அங்கு நடைபெற்றதைத் தொடர்ந்து பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். பொலிஸ் ஜீப் ஒன்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் எரிக்க முயன்றனர்.

## பெல்கிரேடில் சாஸ்திரிக்கு அரசாங்க சைவ விருந்து

### சரித்திரத்தில் முதல் சம்பவம்

பெல்கிரேட், ஜூலை 29

**யூகோஸ்லேவியத் தலைநகர் பெல்கிரேடில் சரித்திரத்திலேயே முதல் தடவையாக, அரசாங்க விருந்தின் போது சைவ உணவு பரிமாறப்பட்டது அங்கு விஜயம் செய்திருக்கும் இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரியைக் கௌரவிக்கும் பொருட்டு நடத்தப்பட்ட இந்த விருந்தில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.**

நேற்று பெல்கிரேட் வந்து சேர்ந்த திரு. சாஸ்திரிக்கு இங்கு பெரும்வரவேற்பு அளிக்கப்பட்டது சம்பிரதாயத்தையும் மீறி ஜனாதிபதி டிட்டோ தாமே நேரில் விமான நிலையத்துக்கு வந்து அவரை முதலில் வரவேற்றார்.

பெல்கிரேட் நகரசபை அவருக்கு 'பெல்கிரேட் நகரப் பிரஜை' என்ற கௌரவத்தை நேற்று வழங்கிக் கௌரவித்தது.

ஜனாதிபதி ஜோன்ஸனின் விசேஷத்தூதர் திரு. ஹரிமன் நேற்று டிட்டோ-சாஸ்திரி பேச்சு ஆரம்பமாகுமுன், வியட்னாம் சம்பந்தமான ஜோன்ஸனின் அறிக்கை ஒன்றை இருவரிடமும் கையளித்தார் என்றும், இருதலைவர்களும் இன்று அதை பரிபூரணமாக பரிசீலனை செய்வார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது. நேற்று இருதலைவர்களும் சுமார் 90 நிமிடம் பேச்சு நடத்தினர்கள். வியட்னாம் முக்கிய விஷயமாக இருந்ததென்றும் ஐ. நா., படைக்குறைப்பு, மண்டல சார்பற்ற கொள்கையை வலுப்படுத்துதல் ஆகியன பற்றியும் அவர்கள் பேசினர்கள் என்று அறிவிக்கப்பட்டது.

பின், யூகோஸ்லேவிய பிரதமர் திரு. ஸ்டெம்போலிக் திரு. சாஸ்திரிக்கு ஒரு விருந்து நடத்தினர்.

மாலையில் 'நட்புறவுப் பூங்கா'வில் திரு. சாஸ்திரி ஒரு மரக்கன்றை நாட்டினர், திரு. நேரு அங்கு முன்பு நாட்டிய மரம் இப்போது நன்கு வளர்ந்திருப்பதையும் அவர் கண்டார்.

அதே சமயம் ஸ்ரீமதி சாஸ்திரி ஸ்ரீமதி டிட்டோவைச் சந்தித்து, யுத்தத்தின்போது பெல்கிரேடுக்கு ஏற்பட்ட சேதம் பற்றியும், அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் கேட்டறிந்தார்.

—

## பி. ஓ. ஏ. ஸி.

லண்டன், ஜூலை 29

பி. ஓ. ஏ. ஸி, விமானக்கார்ப்பரேஷனுக்கு சென்ற ஆண்டு 75 லட்சம் பவுன் லாபம் கிடைத்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

—

## ஒபடே டில்லி வருவார்

புதுடில்லி, ஜூலை 29

பாரதத்தில் 10 நாள் சுற்றுப் பிரயாணம் செய்யும்பொருட்டு உகண்டா பிரதமர் திரு ஒபடே வருகிற ஞாயிற்றுக்கிழமை டில்லி வருவார், டில்லியில் மட்டும் அவர் 5 தினங்கள் தங்குவார்.

—

## கிடுகுத் தொழிற்சாலை

ஊர்காவற்றுறை, வியாழன்

ஊர்காவற்றுறை புனித ஜேம்ஸ் சனசமூக நிலையத்தின் ஆதரவில் இயங்கும் புனித ஜேம்ஸ் கிடுகுத் தொழிற்சாலையை ஊர்காவற்றுறை எம்பி திரு. வி. நவரத்தினம் திறந்துவைத்தார். இதனைத் தொடர்ந்து பெண்கள் கிடுகு பின்னும் போட்டியொன்றும் நடைபெற்றது.

திரு. எஸ். பிலிப்புப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வித்துவான் வேல்மாறன், பண்டிதை செல்வி சரஸ்வதி, திரு பி. இம்மனுவல் ஆகியோர் உரையாற்றினர்.

## ஆசியவங்கி மூலதனம் பெருகும்?

லண்டன், ஜூலை 29

ஆசிய அபிவிருத்திவங்கியின் மூலதனம் உத்தேச 100 கோடி டாலரை விட அதிகரிக்கும் எனத்தெரிகிறது. ஆசிய நாடுகள் மட்டும் 50 கோடி டாலர்கள் இதற்கு வழங்குமாம்.

—

## ஆடி அமாவாசை தீர்த்தம்

சுழிபுரம், வெள்ளி

தீவின் பல பாகங்களிலிருந்தும் இருந்து ஆடி அமாவாசை தீர்த்தம் ஆடுவதற்காக நேற்று கீரிமலைக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்திருந்தனர், சமய சொற்பொழிவுகள் கதாப்பிரசங்கங்கள் இசை நிகழ்ச்சிகள் ஆகியன இங்கு நடைபெற்றன. மேளக்கச்சேரியும் நடைபெற்றது.

**திருவடி நிலையில்**

சுழிபுரம் திருவடி நிலை தீர்த்தக் கரையிலும் ஆடி அமாவாசைத் தீர்த்தம் நடைபெற்றது, பறுளை முருகமூர்த்தி சுவாமிகள் தீர்த்தக் கரைக்கு கொண்டு வரப்பட்டு விசேட பூசைகள் நடைபெற்றன. பல நூற்றுக்கணக்கான மக்கள் தீர்த்தம் ஆடினர்.

—

## முத்தமிழ் மன்றத்தின் கலைவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

கும்பிழான் கலைமகள் முத்தமிழ் மன்றத்தின் கலைவிழா நாளை மாலை கும்பிழான் கற்கரை விநாயகாலயத்துக்கு அருகாமையிலுள்ள திறந்த வெளியரங்கில் நடைபெறவிருக்கிறது. விழாவிற்குப் பிரதம விருந்தினராக வலி. வடக்குக் காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை கலந்துகொள்வார்.

திருவாளர்கள் அ. க. சிவநேசன், அ. சரவணமுத்து. சி. ஆறுமுகம் ஆகியோர் விழாவில் பல்வேறு பொருள் குறித்து உரைநிகழ்த்துவர். விழாவில் நாடகங்கள், சங்கீதம் கிராமிய நடனங்கள் ஆகிய கதம்பநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

—

## துணுக்காய் பிரிவின் பதில காரியாதிகாரி

துணுக்காய், வியாழன்

துணுக்காய் பிரிவின் பதில் காரியாதிகாரியாக திரு. மா. இராசரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார். உரும்பராயைச் சேர்ந்த இவர் யாழ்ப்பாணம் கச்சேரியில் காணி அபிவிருத்திப் பிரிவில் லிகிதராகக் கடமையாற்றினர்.

துணுக்காய் காரியாதிகாரியாகக் கடமையாற்றிய திரு. எஸ், ஜெயகாந்தனை இடமாற்றம் செய்தபின்னர் பல மாதங்களாகக் காரியாதிகாரி எவரும் இல்லாமலே இயங்கிவந்தது. கிளிநொச்சி எம். பி, இதுகுறித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறு உள்நாட்டு மந்திரியிடம் கோரியிருந்தார்.

## கதிர்காம தினத் திருவிழா

வீரகாவற்றுறை, வியா. சரவணை "தேவபுரம்" ஸ்ரீ சதிர்வேலாயுத சுவாமி கோவிலில் ஆகஸ்டுமாதம் 11ந் திகதி கதிர்காம தினத் திருவிழா நடத்த ஏற்பாடாகியுள்ளது. ஆகஸ்டு மாதம் 2-ம் திகதி தொடக்கம் பத்து நாட்களுக்கு விசேட பூசைகளும், அபிஷேகமும் நடைபெறுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

புளியங்கூடல் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவிலிலும் கதிர்காமதின பூசை நடைபெறவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## பொன் கந்தையா நினைவு விழா

உடுப்பிட்டி, வியாழன் முன்னாள் பருத்தித்துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரான திரு பொன்னம்பலம் கந்தையாவின் ஞாபகார்த்த விழாவை அடுத்தமாத முற்பகுதியில் கரவெட்டியில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

**வியாழன் 29-7-65**

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவசற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-30 பக்திப்பாடல்கள், 8-00 சேர்ந்த இசை 8-15 இஸ்லாமிய கீதங்கள்-

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதசுரம்,

இரவு 6-15 கிராம சஞ்சிகை 6-45 ஞானாஞ்சலி 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 நேயர் விருப்பம், 10-00 புல்லாங்குழலும் கிளாரினெட்டும், 10-15 சேர்ந்த இசை.

REGAL - JAFFNA
NOW SHOWING
Wayne Morris
in
DESPERADO

## சாதனை பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி

கோண்டாவில், புதன் கோண்டாவில் சைவத்தமிழ்க் கலவன் சாதனை பாடசாலையில் நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் அப்பர் இல்லம் இவ்வருட சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூன்று இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளின் விபரம் வருமாறு:

150 யார் ஓட்டம் மத்திய பிரிவு பெண்கள்- த செந்தாமரை, நா பவனம், செ சரோஜினி

800 மீற்றர் ஓட்டம் மேற்பிரிவு ஆண்கள்- இ சாந்தலிங்கம், மு மகேந்திரராசா, செ தர்மலிங்கம்.

400 மீற்றர் ஓட்டம் மேற்பிரிவு ஆண்கள்- வே இரத்தினசிங்கம், க மாணிக்கவாசகர், செ தர்மலிங்கம்,

200 மீற்றர் ஓட்டம் மத்திய பிரிவு ஆண்கள்- இ பாஸ்கரன், சி கயிலாயநாதன் வி கைலாயநாதன்; மேற்பிரிவு ஆண்கள்- மா சுப்பிரமணியம், க மாணிக்கவாசகர், மு மகேந்திரராசா.

150 மீற்றர் ஓட்டம் கீழ்ப் பிரிவு ஆண்கள்- செ பரமானந்தம், பே ஜெயரத்தினம், இ கணேசலிங்கம்.

100 மீற்றர் கீழ்ப்பிரிவு ஆண்கள்- செ பரமானந்தம், த சுந்தரலிங்கம், இ கணேசலிங்கம் மத்தியபிரிவு ஆண்கள்- இ பாஸ்கரன், பொ கோபால கிருஷ்ணன், பொ சுப்பிரமணியம்; மேற்பிரிவு ஆண்கள்- வை திருச்செல்வராசா, வே இரத்தினசிங்கம், மா சுப்பிரமணியம்; கீழ்ப்பிரிவு பெண்கள் க சாரதா, ச கமலராணி, க பத்தினி; மத்திய பிரிவு பெண்கள்- த செந்தாமரை, செ சரோஜினி, நா பவனம்; மேற்பிரிவு பெண்கள்- பொ கனகேஸ்வரி, மா யோகம்மா, செ செல்வராணி

60 மீற்றர் சுரண்டி ஓட்டம் கீழ்ப்பிரிவு பெண்கள்- இ லலிதா, சி சிவயோகராணி, பெ விஜயராணி

சமநிலை ஓட்டம் மத்தியபிரிவு பெண்கள்- சி கமலாம்பிகை, சி அருந்தவமலர், மா இராசலட்சுமி.

80 மீற்றர் ஓட்டம் கீழ்ப்பிரிவு பெண்கள் க சாரதா, ச கமலராணி, க பவானி

75 மீற்றர் ஓட்டம் மேற்பிரிவு ஆண்கள்- வ அற்புதசிங்கம், வே இரத்தினசிங்கம், மா சுப்பிரமணியம்.

75 மீற்றர் தடைஓட்டம் மத்தியபிரிவு ஆண்கள்- வி கைலாயநாதன், கு சாந்தகுமாரன், சி கைலாயநாதன்; மேற்பிரிவு பெண்கள்- யோ கிருஷ்ணவேணி, க செல்வராணி, சி பரமேஸ்வரி மத்தியபிரிவு பெண்கள்- அ விஜயலட்சுமி, சு பஞ்சதேவி, பா தருமேஸ்வரி

200 மீற்றர் ஓட்டம் மேற்பிரிவு பெண்கள்- மா யோகம்மா, க பரமநாயகி, கொ கனகேஸ்வரி.

அணிவகுப்பு- சுந்தர் இல்லம், சம்பந்தர் இல்லம், அப்பர் இல்லம்.

## பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள்

பருத்தித்துறை, வியா வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்படும் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் பருத்தித்துறை காட்லிக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்றன.

அமெரிக்கமிஷன் கல்லூரி, சிதம்பராக்கல்லூரி, காட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், திரு இருதயக்கல்லூரி, தேவரையாளி இந்துக்கல்லூரி, விக்கினேஸ்வராக்கல்லூரி, மெதடிஸ்த மகளிர் கல்லூரி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வடஇந்து மகளிர் கல்லூரி ஆகிய பத்துக்கல்லூரிகள் இப்போட்டிகளில் கலந்துகொண்டன.

திரு வி சண்முகராசாவின் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்திற்கு இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் தலைவர் திரு பி கைலாசநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

**சாம்பியன்கள் விபரம் வருமாறு:—**

மேற்பிரிவு ஆண்: எஸ் கமலேஸ்வரன் ஹாட்லிக் கல்லூரி

எல் பொன்னுத்துரை மத்திய மகாவித்தியாலயம்.

மேற்பிரிவு பெண்: வி சுதந்திரதேவி வ இ ம கல்லூரி

மத்தியபிரிவு ஆண்: எஸ் சிவனருள் சுந்தரம் சிதம்பராக் கல்லூரி

மத்தியபிரிவு பெண்: எஸ் இராசேஸ்வரி மெதடிஸ்த மகளிர் கல்லூரி

கீழ்ப்பிரிவு ஆண்: கே விக்கினேஸ்வரமூர்த்தி மத்தியமகாவித்தியாலயம்.

கீழ்ப்பிரிவு பெண்: வி சரோஜினிதேவி வ இ ம கல்லூரி

பெண்கள் முதல்வி: வி சுதந்திரதேவி வ இ ம கல்லூரி.

ஆண்கள் முதல்வன்: எஸ் சிவனருள் சுந்தரம் சிதம்பராக் கல்லூரி,

கைப்பந்தாட்டம்: சிதம்பராக்கல்லூரி.

கால்பந்தாட்டம்: ஹாட்லிக் கல்லூரி.

ஆண்கள் மத்தியபிரிவில் பத்தும் பெண்கள் பிரிவில் நான்குமாக மொத்தம் 14 சாதனைகள் உருவாக்கப்பட்டன.

* * *

குரும்பசிட்டி, வியாழன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டியின்போது நான்கு புதியசாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன. மேற்பிரிவில் என் கருணாகரன் கோல் ஊன்றிப் பாய்தலில் 10 அடி ஒன்பதரை அங்குலம் பாய்ந்தும் உயர்தரபிரிவில் கே சத்தியநாதன் 440 யார் ஓட்டத்தினை 61 செக்கனில் ஓடி முடித்தும், வ்னேப்பாய்தலில் 17 அடி ஒன்பதே முக்கால் அங்குலம் பாய்ந்து தத்தமது சாதனைகளை ஏற்படுத்தியுள்ளனர். பெண்களில் மத்தியபிரிவில் சி வரலட்சுமி 21 அடி 6 அங்குலம் குண்டு எறிந்து புதிய சாதனையொன்றினை நிலைநிறுத்தியுள்ளார் மேற்படி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று முடிந்த போட்டிகளில் 256 புள்ளிகளைப்பெற்ற சிவித் இல்லம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. மற்றைய இல்லங்களான வாட், டிக்சன் ஆகியன முறையே இருநூற்றுமுப்பத்தைந்தரை, நூற்றுத்தொண்ணூற்றொன்றரை புள்ளிகளைப் பெற்று இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்டன.

இவ்விளையாட்டுப் போட்டி பரிசளிப்புவிழாவிற்கு கல்லூரி அதிபர் திரு சே கிருஷ்ணபிள்ளை தலைமைவகித்து அனைவரையும் வரவேற்றுப் பேசினர். திரு பி எ இராஜேந்திரா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசுகளை வெற்றிபெற்றவர்களுக்கு வழங்கினார். பின்வருவோர் பிரிவுச் சாம்பியன் வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆண்கள்: உயர்தரப் பிரிவு: வி பாலசிங்கம், என் கருணாகரன், மேற்பிரிவு: கே சிவதாசன், ஏ பாலச்சந்திரன், மத்தியபிரிவு: எம் பாலச்சந்திரன், எஸ் சத்தியநாதன், கீழ்ப் பிரிவு: சி சிவசுப்பிரமணியம்,

பெண்கள்: உயர்தரப்பிரிவு: சி வைடூரியம், மேற்பிரிவு: ஆர் பிரேமாவதி, மத்தியபிரிவு எஸ் வரலட்சுமி, கீழ்ப்பிரிவு: எஸ் ரஞ்சிதமலர்.

## பாடசாலைகளின் கதம்ப நிகழ்ச்சி

சுழிபுரம், வெள்ளி வட்டுக்கோட்டைத் தொகுதி பாடசாலைகளின் கதம்ப நிகழ்ச்சிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் வடபகுதி கல்வி உதவி வித்தியாதிபதி திரு.ரீ.எஸ் தனிசலத்தின் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது. போட்டியில் வெற்றி பெறும் பாடசாலைகளுக்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசுகள் வழங்குவார்.

## தீப்பற்றியதால் இரு வீடுகள் நாசம்

வவுனியா, வெள்ளி வவுனியா குடியிருப்பிலுள்ளமையின் இரு வீடுகளும் தீவிபத்துக்குள்ளாகி தரை மட்டமாக்கப்பட்டதுடன் பெருநட்ட சேதமும் ஏற்பட்டது.

தீயில் அகப்பட்ட இவ்விரு வீடுகள் சுமார் மூன்று மணித்தியாலத்தில் தரைமட்டமாக்கப்பட்டதென்றும் அயலவர்கள் மற்றைய வீடுகளில் தீ பற்றுவண்ணம் ஒருவிதமாக தீயைத் தணித்தார்களென்றும், இத் தீவிபத்துப் பற்றிக் கூறப்படுகிறது.

இத் தீவிபத்தால் எரிந்து சாம்பலான வீடுகள் திரு க. சின்னப்பு என்பவருக்கும், அவரது சகோதரருக்கும் சொந்தமானதெனச் சொல்லப்படுகிறது.

## பாடசாலைக் கட்டடங்களுக்கு ரூ. 75 லட்சம்

அம்பலப்பிட்டி, வியா பாடசாலைக் கட்டடங்களுக்கென ரூபா 75 லட்சம் ஒதுக்குவதென நேற்றுக் கூடிய மந்திரிசபை தீர்மானித்துள்ளது. இந்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

பாடசாலைக் கட்டடங்களைக் கட்டுவதற்குப் போதிய நிதி இல்லாத காரணத்தினால் முந்திய அரசாங்கம் இக்கட்டத்தை நிறைவேற்றாதிருந்தது.

வரி விளம்பரம்

### தேவை

விற்பனையாளர்: விண்ணப்பதாரர் தமிழ் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் ஆங்கிலத்துடன் அல்லது ஆங்கில சி. பா. த ப. பரீட்சையில் தமிழுடன் சித்தியடைந்தவராகவும், செசவு அனுபவம் உள்ளவராகவும், வயது 21-30 க்கு இடைப்பட்டவராகவும் இருத்தலவேண்டும். மாதவேதனம்: ரூபா 70/-ம், 33 1/3% அகவிலை வாழ்க்கைச் செலவும் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற்கு 10-8-65ம் திகதிக்கு முன் விண்ணப்பம் அனுப்பப்படல்வேண்டும்.

(து சீனிவாசகம்) கௌரவ காரியதரிசி, யாழ்ப்பாண ஐக்கிய செசவு சங்கங்களின் சமாசம், 10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 702

### WANTED

Wanted Machanical Foreman with at least ten years experience in Motor Machanism and administration in recognised garages: apply in person to Winslows Jaffna. 764

### தவறு

இம்மாதம் 24, 25-ம் திகதி ஈழநாடு பத்திரிகையில் இலவசக்கல்வி, 'ஜெயாதயா கிப்பு விற்பனைகள்' பற்றி வெளிவந்த விளம்பரத்தில் 18-ம் இலக்கம் பலாலி வீதி, என்ற விலாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இது தவறு. இங்கு வகுப்புகளில்லை. வித்தியாலயம் இல்லை. 708

## நெடுந்தீவில் பஸ் சேவை

நெடுந்தீவு, வியாழன் பலகாலமாக எதிர்பார்த்த நெடுந்தீவு பஸ் சேவை அண்மையில் ஆரம்பிக்கப்பட்டதும் மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால் சேவையில் ஈடுபட்ட பஸ்வண்டியின் கட்டண விகிதத்தை அறிந்ததும் மக்கள் பெரும் ஏமாற்றத்தை அடைந்துள்ளார்கள். சிலவேளைகளில் சாரதியும் கண்டக்டரும் மட்டுமே பஸ் வண்டியில் பிரயாணம் செய்பவர்களாகக் காணப்படுகின்றனர். பஸ் வண்டியின் சேர் ஆசி பிரயாணிகளுக்கு பொருத்தமற்றதாகவே அமைந்துள்ளது. மோட்டார் வண்டியில் செல்லும் பிரயாணிகள், வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளிகள் பாடசாலை மாணவர்கள் ஆகிய மூன்று பிரிவினருக்குமே பஸ் சேவை மிகவும் அவசியமாகும் இம் மூன்று பிரிவு மக்களுக்கும் பொருத்தமற்ற நேரசூசியுடனேயே பஸ் சேவை நடக்கிறது. பஸ் சேவையின் கட்டணமும் நேரசூசியும் மக்களுக்குப் பொருத்தமானதாகவும் அரசாங்கத்துக்கு நஷ்டமேற்படாமலும் அமைவது மிகவும் அவசியமாகும் எனப் பொது மக்கள் கருதுகின்றனர்.

## கல்வித் தொண்டு

உடுப்பிட்டி, வியாழன் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகரான வே. முதலியார் சின்னத்தம்பியின் ஞாபகார்த்தமாகக் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர்களில் ஒருவருக்கு இலவச மருத்துவக் கல்வி (மெடிக்கல் சயன்ஸ்) அளிப்பதற்கு நெல்லியடியைச் சேர்ந்த திரு. வே. சி. நடராசா கியூ சி. முன்வந்துள்ளார். பெரும்பாலும் இப்பகுதியிலுள்ள ஏழை மாணவர் ஒருவருக்கே இச்சந்தர்ப்பம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று முதல்

சிங்ஸ்லி (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு)

மொடேர்ன் (பதுளை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜிதா (ஹட்டன்)

விஜயா (மட்டக்களப்பு) | நிவோலி (நுவரெலியா) | கல்யாணி (காவலப்பிட்டி)

லக்ஷ்மி (இரத்தினபுரி) | அயன் (மன்னார்)

எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
மற்றும் பலர் நடித்த
தேவர் பிலிம்ஸ்
நீதிக்குப்பின் பாசம்

# பழைய அரசாங்கத்தின் அடிச்சுவட்டில் புதிய அரசாங்கம்!

## தமிழ் அரசாங்க ஊழியர் நிலை பற்றி கோடீஸ்வரன் அறிக்கை

கொழும்பு, வியாழன்

"அரசாங்கம் தமிழ்மக்கள்பால் காட்டிவரும் துவேஷ மனப்பான்மையை மூடிமறைப்பதற்கான ஒரு அங்கீகாரக் கருவியாகவே தமிழ் எம். பி.க்கள் அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர். இன்றைய நிலையில் தமிழ் எம். பி.க்கள் அரசாங்கத்தில் அங்கம்வகிப்பதால் ஏதாவது உபயோகமும் உண்டுதானா? என்று எமது சங்கம் சந்தேகிக்கிறது."

இவ்வாறு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் 'ஈழநாட்'டுக்கு விடுத்துள்ள பத்திரிகைச் செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க எழுதுவினைஞர்கள் சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டியது குறித்து அண்மையில் மந்திரிசபை செய்துகொண்ட முடிவு தமிழ் ஊழியருக்கு எதுவித பயனும் அளிக்கவில்லையெனத் தமது அறிக்கையில் திரு. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உத்தியோகமொழி தேர்ச்சி சம்பந்தமாக காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகா வழங்க சம்மதித்திருந்த சலுகைகளைவிட சிறிதேனும் அதிகம் வழங்க இவ்வரசாங்கம் தயாராகவில்லை என்பதை இந்த முடிவு எடுத்துக்காட்டுகிறது. பழைய ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளால் புதிய உத்தியோகஸ்தர்களின் பதவி உறுதிப்படுத்தல், சம்பள உயர்வுத்தடை பதவி உயர்வுத் தடை ஆகிய எந்தப்பிரச்னையையும் குறைத்துவிடவில்லை. தமிழ் அரசாங்க ஊழியர் மீது முன்னைய அரசாங்கம் கடைப்பிடித்துவந்த துவேஷ மனப்பான்மையையே தற்போதைய அரசாங்கமும் கடைப்பிடித்து வருகிறது. சிங்கள புதிய ஊழியர்கள் தங்கள் பதவிகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளபோதிலும் புதிய தமிழ் ஊழியர்கள் உறுதிப்படுத்தல் எதுவுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளனர். ஒன்பது வருடங்கள் சேவைபுரிந்தும் தமிழ் புதிய ஊழியர்கள் இன்னும் தங்கள் பதவிகளில் உறுதிப்படுத்தப்படாது சம்பள உயர்வின்றி கஷ்டப்படும் கேவலநிலைக்கு ஆளாகியுள்ளார்கள். பழைய ஊழியர்களில் 55 வயதுக்கு பின் கடமையாற்ற விரும்புவோர் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டுமென்பதால் ஓய்வுபெற்ற ஊழியர்களும் அரசாங்கத்தின் புதிய தீர்மானத்தால் எவ்வித நன்மையும் அடையவில்லை.

அரசாங்கத்தின் இந்தப் புதிய முடிவுகள் தமிழ் இனத்தை அடிமைகளாக்குகின்றது. மந்திரிகளை வரவேற்பதிலும் உபசரிப்பதிலும் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல்வாதிகள் இதை மறந்துவிட்டார்கள் என்பதும் தங்கள் பாதையைவிட்டு விலகிவிட்டார்கள் என்பதுதான் உண்மை!

# "கடையை உடைத்து பீடி சிகரட்டுகளை எடுத்தனர்"

## இயக்கச்சி ராணுவத்தாக்குதல் வழக்கில் கடைக்காரர் சாட்சியம்

சாவகச்சேரி, வியாழன்

"தாளையடியில் நான் தேநீர்க் கடை வைத்திருக்கிறேன். சம்பவம் நடந்த 5-7-64 அன்று பிற்பகல் 3மணி போல நான் எனது கடையில் இருந்த பொழுது மரியாம்பிள்ளை என்பவரின் கடையில் கதவை உடைக்கும் சத்தம் கேட்டது. நான் எனது கடைக்கு வெளியே வந்து பார்த்த பொழுது அவரது கடைக்கு முன்னால் 15, 20 இராணுவத்தினர் நிற்பதைக் கண்டேன். கடைக்கு உள்ளேயும் நின்றனர். உள்ளேயிருந்து சத்தம் கேட்டது. ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. பின்னர் 15, 20 இராணுவத்தினர் எனது கடைக்கு ஓடிவந்தனர். நான் திரும்பிக் கடைக்குள் ஓடினேன். இராணுவத்தினர் கதவைத் திறந்துவிட்டு உள்ளே இருந்த பொருட்களைச் சேதப்படுத்தினர், கடையில் இருந்த சிகரெட்டுகளையும் பீடிகளையும் எடுத்துச் சென்றுவிட்டனர். உடனே நான் கடையை விட்டுவிட்டு ஓடினேன், என்னைப் பலர் துரத்தி வந்தனர், ஒருவர் வீட்டிற்குள் துரத்திவந்து அடித்தார். மற்றவர்கள் வீட்டுப் பொருட்களைச் சேதப்படுத்தினார்கள், என்னைத்தாக்கியவர் கொட்டனால் 3, 4 தடவைகள் அடித்தவுடன் நான் நிலத்தில் விழுந்துவிட்டேன். அவர்கள் எல்லோரும் போன பின்னர் எழுந்து வீட்டிற்குள் சென்று பார்த்தேன்.

இவ்வாறு பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இயக்கச்சி இராணுவத் தாக்குதல் வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த 75 வயதுள்ள பிலிப்பு பேதுருப்பிள்ளை கூறினர்.

### குற்றச்சாட்டுகள்

இவ்வழக்கில் இயக்கச்சி இராணுவ முகாமைச் சேர்ந்த லெப்டினன்ட் குமாரசாமி உட்பட 19 இராணுவத்தினர் மீது சட்டவிரோதமாகக் கூட்டம் கூடிக் குழப்பம் செய்ததாகவும், தாளையடி வாசிகளான மரியாம்பிள்ளை பெனடிக்ற், அந்தோனி செபமாலை, அருளம்பலம் பத்திநாதர் ஆகியோருக்கு அடித்துக் காயம் விளைவித்ததாகவும், பிலிப்பு மோசேஸ் என்பவரின் இரு வீடுகளுக்கும், சி. மரியாம்பிள்ளை என்பவரின் வீட்டுக்கும் சேதம் விளைவித்ததாகவும், அ. செபமாலையின் வீட்டுக்கும், உடைமைகளுக்கும் 3000 ரூபாய் நஷ்டமும், பிலிப்பு பேதுருப்பிள்ளையின் வீட்டுக்கும், உடைமைகளுக்கும் 600 ரூபா நஷ்டமும், அ. பத்திநாதரின் காருக்கு 2000 ரூபா நஷ்டமும் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

### அடித்தவரை அடையாளம் காட்டினார்

சாட்சியமளித்த பிலிப்பு பேதுருப்பிள்ளையிடம் நீதிபதி அங்கு வந்த இராணுவத்தினரை அடையாளம் காட்ட முடியுமா? என்று கேட்டார். அதற்குச் சாட்சி தனக்கு அடித்தவரை மாத்திரம் அடையாளம் காட்டுவதாகக் கூறினார். நீதிபதியின் அனுமதியின்பேரில் எதிரிகளுக்கு அருகில் சென்று 16வது எதிரியைச் சுட்டிக்காட்டினார். அவர்

மேலும் சாட்சி மளிக்கையில் வீட்டையும், பொருட்களையும் சேதப்படுத்தியவர்களை அடையாளம் தெரியாதென்றார்.

எதிரிகளின் வழக்கறிஞரின் குறுக்குவிசாரணையின் போது சாட்சி, பொலிஸாருக்கு வாக்குமூலம் அளிக்கும்போது இராணுவத்தினரில் ஒருவர் தன்னைத் தாக்கியதாகக் கூறியதாகவும், பொலிஸார் அதைப் பதிவுசெய்தார்களோ இல்லையோவென்று தனக்குத் தெரியாதென்றும் கூறினர்.

மேல்விசாரணை அடுத்த மாதம் மூன்றாம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. சி. பாலகிருஷ்ணனின் உதவியுடன் ஆஜரானர்.

## இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் மகோற்சவம், தேர்த்திருவிழா வசந்தமண்டப பூஜை காலை 9-30 க்கும் ரதாரோகணம் காலை 10-30 க்கும் ரதஅவரோகணம் மாலை 5-00 க்கும் நடைபெறும். மாலை 6 மணி முதல் ஸ்ரீ மணி பாகவதரின் மகாபாரத தொடர்ச்சி நடைபெறும்.

* * *

அல்லைக் கதிர்காமச்சிவன் கோவிலில் கடந்த சில நாட்களாக நடைபெற்று வரும் வருடாந்த அம்மன் உற்சவத்தில் இன்று தேர்த்திருவிழா காலை பத்து மணிக்கு நடைபெறும்.

இலங்கை-இந்திய

## கூட்டுக்கமிட்டியின் தீர்மானம்

பம்பலப்பிட்டி, வியாழன்

இலங்கைப் பிரஜைகளாகவோ அல்லது இந்தியப் பிரஜைகளாகவோ ஆவதற்கு விரும்புபவர்கள் இதற்கான தங்கள் விண்ணப்பங்களை இந்த வருடம் செப்டம்பர் மாதத்திற்குள் அனுப்பவேண்டுமென 1964-ம் வருடம் அக்டோபர் மாதம் கைச்சாத்தான இலங்கை-இந்திய ஒப்பந்தம் அமுல்நடத்துவது சம்பந்தமாக நியமிக்கப்பட்ட கூட்டுக்கமிட்டி தீர்மானித்துள்ளது.

கூட்டுக்கமிட்டி நேற்றுக் கூடியபோது மேற்கண்டவாறு தீர்மானித்தது. கமிட்டி மீண்டும் அடுத்த மாதம் 18-ம் திகதி கூடும்.

## வாலிபமுன்னணி வருடாந்தக்கூட்டம்

நயினாதீவு, வியாழன்

நயினாதீவு தமிழ் வாலிப முன்னணியின் வருடாந்த பொதுக்கூட்டம் திரு ச. சின்னத்துரை தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: சி. பொ. இராசரெத்தினம்; உபதலைவர்: ச. சின்னத்துரை; காரியதரிசி: க. லோகநாதன்; உபகாரியதரிசி: கா. நடராசலிங்கம்; தனாதிகாரி: க. சோதிலிங்கம்; உபதனாதிகாரி: க. சுப்பையா. 9 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## சங்கங்கள் இணைந்தன

வவுனியா, வியாழன்

புளியம்பொக்கணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் திரு. அ. சரவணமுத்து தலைமையில் சங்கமண்டபத்தில் நடைபெற்றது.

தலைமையாசிரியர் திரு இ. த. சுப்பிரமணியம் புன்னைநீராவி கிராமத்து சங்க உறுப்பினர்களையும் அச்சங்கத்துடன் சேர்க்கவேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டுவந்தபோது அதனை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

மானிப்பாயில்

# பொலிஸாரின் "சாராய வேட்டை"

யாழ்ப்பாணம், வெள்ளி

ஆனைக்கோட்டைப் பொலிஸாரின் தீவிர நடவடிக்கைகளைத் தொடர்ந்து கடந்தவாரம் மானிப்பாய் பட்டினத்திலிருந்து இரண்டு மைல் தூரத்தில் பதினெந்தரை போத்தல் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட சாராயம் (வடிசாராயம்) கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆனைக்கோட்டைப் பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து சப் இன்ஸ்பெக்டர் திரு. இராசையாவும் பொலிஸ் சார்ஜன்ட் திரு வீரபாகுவும் ஸ்தலத்துக்கு விரைந்து சென்று பதினெந்தரை போத்தல்கள் சட்ட விரோத சாராயமும் இதைத் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் உபகரணங்கள், மற்றும் 864 திலும் கோடாவைக் கொண்ட இரண்டு பீப்பாய்கள் ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர். இது சம்பந்தமாக மானிப்பாயைச் சேர்ந்த திலையம்பலம் நடராஜா என்பவரை பொலிஸார் கைது செய்தனர்.

இது சம்பந்தமாக கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நடைபெற்ற வழக்கில் எதிரிக்கு அறுநூறு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

## தெப்பத் திருவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோவிலில் முதன் முறையாக நடைபெறும் தெப்பத்திருவிழா காங்கேசந்துறைக் கடலில் இன்று மாலை 7 மணிக்கு நடைபெறும். மாவை முருகன் மாலை 6 மணிக்கு புறப்பட்டு காங்கேசந்துறை ஆனந்தபிள்ளையார் கோவிலை வந்தடைந்து பின் மாவை முருகனும் பிள்ளையாரும் காங்கேசந்துறைக் கடலுக்கு எழுந்தருளுவார்கள்.

## மகாவித்தியாலய விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

பூநகரி மகாவித்தியாலயத்தின் இல்லங்களுக்கான விளையாட்டு போட்டி எதிர்வரும் புதன்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வடபகுதி வித்தியாதரிசி திரு தணிகாசலம் கலந்து கொள்வார்.

## எம். பி. பீடம் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியானவற்றை பேசவிடாது தடுப்பது எனது கடமையாகும். ஏற்கனவே இந்த மாதிரி பேசியவர்களை நான் வாபஸ் பெறுமாறு கேட்டிருக்கிறேன். இதற்கு மீறி நடப்பவர்களை வெளியேற்ற நான் தயங்கமாட்டேன்.

### முதல் குற்றம்

நேற்றிரவு நடந்தசம்பவத்தை முதல் குற்றமாக கருதுகிறேன். இதில் சம்பந்தப்பட்டவர்களையும் முதல் தடவையாக குற்றம் செய்தவர்களாக கருதுகிறேன்

### மன்னிப்பு கேட்கவேண்டும்

நேற்றிரவு நடந்த சம்பவம் குறித்து; இதில் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து எனது அறையில் விசாரித்துவிட்டேன். நேற்றிரவு நடந்த வெட்கக்கேடான செயல் குறித்து இருவரும் சபையில் மன்னிப்புக்கேட்டதுடன் ஒருவருக்கொருவரும் மன்னிப்புக்கேட்க வேண்டுமென்று கோருகிறேன்."

இப்பொழுது நான் சமூகசேவாமந்திரி திரு அசோகா கருணாரத்னவை சபைக்கு அழைத்து மன்னிப்புக் கேட்குமாறு கோருகிறேன்"

### விளக்கத்துக்கு மறுப்பு

அசோகா: ஐயா; இதற்கு நான் விளக்கம் கொடுக்க முடியுமா? எனக்கு அனுமதி அளிப்பீர்களா?

சபாநாயகர்: எனது அறையில் எல்லா விஷயங்களையும் நான் அறிந்து கொண்டதால் இதுபற்றி விளக்கம் கொடுக்க தேவையில்லை.

### அவசர ஆத்திரம்

அசோகா: திடீரென ஏற்பட்ட ஆத்திரத்தினால் உணர்ச்சிவசப்பட்டு வலப்பனை எம். பியை தாக்கிவிட்டேன். ஐயா, நான் ஒன்று கூற விரும்புகிறேன் சபையில் நடைபெறும் விவாதத்தின் போது மற்ற அங்கத்தவர்களை தாக்கிப் பேசுவதற்கு ஒரு வழி உண்டு—"

சபாநாயகர்: அந்த விஷயத்துக்குச் செல்லவேண்டாம். அப்படி நீர் சென்றால் ஏனோ

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலை தொடர்ச்சி)

ரும் இங்கு பேசவேண்டிய அவசியம் ஏற்படும்."

### மன்னிப்பு கோரினர்

இதனைத் தொடர்ந்து சமூகசேவா மந்திரி திரு அசோகா கருணாரத்ன வலப்பனை எம். பி ஹேரத்திடம் மன்னிப்பு கோரினர்

### வலப்பனை எம். பி.

வலப்பனை எம். பி. திரு. ஹேரத் பேசுகையில் சாதி சம்பந்தப்பட்ட கருத்துடன் தாம் எதுவும் கூறவில்லை என்றும் தான் ஒரு பௌத்தர் என்றும் உண்மையான சோஷலிஸ வாதியென்றும் தெரிவித்தார்.

"நான்யாருடைய மனத்தையும் புண்படுத்தக்கூடியமாதிரி பேசியிருந்தால் அதற்காக மன்னிப்பு கோருகின்றேன்" என்று திரு. ஹேரத் கூறினர்.

## இசைவிழா

மீசாலை, புதன்

தென்மராட்சி 10-வது இசைவிழா அடுத்தமாதம் 11-ம், 12-ம் 13-ம் 14-ம் திகதிகளில் சந்திரசேகர வாரிவனநாதர் கோவில் முன்றலில் நடைபெறவிருக்கிறது.

## தேவை

யாழ்ப்பாணம் பலாலி வீதியைச் சேர்ந்த ஆரியகுளம் ஐக்கிய பண்டகசாலைக்கு மனேஜர் வேலைபார்ப்பதற்கு கடைவியாபாரம் செய்து அனுபவம்வாய்ந்த ஒருவர் தேவை, ரூபா 1000/- பிணைப்பணமாகச் செலுத்த வேண்டும். தகுந்த சம்பளம் உண்டு, நம்பிக்கை நன்னடத்தை பத்திரத்துடன் 2-8-65க்கு முன் நேரில் மனுச் செய்க. க. தம்பிப்பிள்ளை, 18, இரண்டாம் ஒழுங்கை, பலாலி வீதி யாழ்ப்பாணம். 710

## பிரிவுபசார விழா

யாழ். கனிஷ்ட தொழில்நுட்ப பாடசாலையினதும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையினதும் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. வே. அழகேசன் அவர்கட்கு மேற்படி கலாசாலைகளின் மாணவர்களும் பழைய மாணவர்களும் அகில இலங்கை வர்த்தகக் கழமன்றத்தினரும் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. (Y M C A) மண்டபத்தில் (ச்சேரியடி) வரும் சனிக்கிழமை (31-7-65) பிற்பகல் 3-30 மணிக்கு ஒரு பிரிவுபசாரத்தை நடத்துவார்கள். அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

இங்ஙனம்,
பிரிவுபசாரக் குழு.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.